**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 03.09.2034</u>**

**OS.49/2014**

**பி.வா.சா. 1 ஜெயக்கொடி ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது தந்தை பச்சையப்பன் ராமியம்பட்டி அருகில் உள்ள குரும்பப்பட்டியை சேர்ந்தவர். எனது தாயார் பச்சையம்மாள் கந்தகவுண்டனூர். எனது தகப்பனாருக்கு குரும்பப்பட்டியில் நிலம் ஏதும் இல்லை. எனது தகப்பனார் அக்ரஹாரம் கூட்ரோட்டில் இறந்தார். அவர் இறந்து சுமார் 45 வருடங்கள் ஆகிறது. எனது தாயார் பெயர் பச்சையம்மாள் அல்ல நாகம்மாள். அவர் இறந்து 20, 25 வருடங்கள் இருக்கும். அவரும் அக்ரஹாரம் கூட்ரோட்டில் தான் இறந்தார். சின்னசாமி எனது அண்ணார். அவர் இறந்து சுமார் 12 வருடங்கள் ஆகிறது. சின்னசாமி அருகே உள்ள சக்தி கோவிலில் இறந்து விட்டார். சோலைக்கொட்டாய் விளாம்பட்டியில் எனது தகப்பனாருக்கு நிலம் இருந்தது. மேற்படி நிலத்தை விட்டு விட்டு இறந்து விட்டார். மேற்படி எனது தகப்பனார் நிலத்தின் சர்வே எண் என்னால் சொல்ல முடியாது. நிலம் எனது தகப்பனார் விலைக்கு வாங்கியது அல்ல புதிதாக புடித்தது. எனது அம்மா பெயரில் பட்டா இருந்தது. மேற்படி ஆவணங்களை எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வில்லை. சின்னசாமி விளாம்பட்டி கூட்ரோடு மற்றும் அரூர் கால்நடை மருத்துவமனை அருகே உள்ள மூன்ரோட்டிடம் கொட்டாய் போட்டு குடியிருந்தார் என்றால் சரிதான். சின்னசாமிக்கு நாங்கள் தான் திருமணம் செய்து வைத்தோம். ஜாலியூர் கிராமம் மாரிமுத்துவை சின்னசாமிக்கு திருமணம் செய்து வைத்தோம். மேற்படி திருமணத்திற்கான திருமண பத்திரிக்கை இல்லை. அந்த காலத்தில் திருமண பத்திரிக்கை அச்சடிக்கவில்லை. சின்னசாமிக்கு குழந்தை இல்லாததால் மாரிமுத்து அம்மாள் சின்னசாமியை விட்டு விட்டு சென்றுவிட்டார். திருமணம் ஆகி 3,4 வருடங்கள் தான் சேர்ந்து வாழ்ந்தார்கள். எனக்கு திருமணம் ஆகி 40 வருடங்களுக்கு மேல் ஆகிறது. சின்னசாமி எங்களுடன் சேர்ந்து வாழ்ந்ததில்லை. 4ம் பிரதிவாதி சின்னம்மாள், 5ம் பிரதிவாதி பார்வதி எனது சகோதரிகள் என்றால் ஆமாம். அவர்களுக்கு எனக்கு முன்பே திருமணம் ஆகி அவர்களது கணவர் வீட்டில் வாழ்ந்து வருகிறார்கள். எனது பெற்றோரும் சின்னசாமியும் வேறுவேறு வீடுகளில் வசித்தார்கள்.

அ.வெளாம்பட்டியில் பள்ளிக்கூடம் உண்டு என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/-S.ASSEEN BANU,
Sub Judge, Harur